# 1. அரசியல் கட்சிகள்

இன்றைய இந்தியாவில் மன்னராட்சிமுறை மறைந்து, தற்போது மக்களாட்சி முறையானது நடைபெற்று வருகிறது என்பதை அனைவரும் அறிவோம். 'மக்களாட்சி என்பது மக்களால், மக்களுக்காக, மக்களே ஏற்று நடத்தும் அரசு' என்பது ஆபிரகாம் லிங்கன் அவர்களின் கூற்று. மக்களாட்சியில் நாட்டின் குடிமகனே ஆள்பவரும், ஆளப்படுபவரும் ஆவார். எனவே குடிமக்கள் தங்கள் உரிமைகளையும், கடமைகளையும் அறிந்திருக்க வேண்டும். மேலும் நாட்டு நடப்புகளைப்பற்றித் தெளிந்த அறிவையும் கொண்டிருத்தல் வேண்டும். எனவேதான் இதற்கான அரசியல் விழிப்புணர்வை அரசியல் கட்சிகள் உருவாக்குகின்றன. மக்கள் கருத்தை முன்நிறுத்த அவை துணைபுரிகின்றன. ஆகவே அரசியல்கட்சிகள் மக்களாட்சி முறையை வெற்றியடையச் செய்ய உதவுகின்றன எனலாம்.

மக்களாட்சியில், அரசியல் கட்சிகள் வெளிப்படையாகச் செயல்படும் அமைப்புகள் ஆகும். ஆகவே, அவை மக்களுக்கும், அரசுக்கும் இடையில் பாலமாகவும், பல்வேறு பிரச்சினைகளை விவாதிக்கும் மேடையாகவும் செயல்படுகின்றன.

## கட்சி என்பதன் பொருள்

மக்கள், ஒரு கூட்டமைப்பாகச் செயல்பட்டு, தேர்தலில் பங்கேற்று, ஆட்சி அமைக்கும் அதிகாரத்தைப் பெறச்செய்யும் அமைப்பு, அரசியல் கட்சியாகும். அவர்கள் மக்கள் சமூகத்தை உயர்த்த நல்ல கொள்கைகளையும், திட்டங்களையும் அமைத்துச் செயல்படுவர். தலைவர்கள், செயல் உறுப்பினர்கள் மற்றும் தொண்டர்கள் ஆகிய மூன்று அமைப்புகளைக் கொண்டு அரசியல்கட்சிகள் செயல்படுகின்றன.

## அரசியல் கட்சிகளின் பண்புக்கூறுகள்

1. முக்கியப்பொதுக்கொள்கைகளை அரசியல் கட்சிகள் அடையாளம் காணுதல்.

2. ஆட்சி அதிகாரங்களில் பங்குபெறுவதைத் தங்கள் நோக்கமாகக் கொள்ளுதல்.

3. இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தின் அடிப்படையில் தங்களின் திட்டங்களையும், கொள்கைகளையும் நடைமுறைப்படுத்துதல்.

4. அரசியல் கட்சிகள் ஓரளவு நிலைத்திருக்கும் தன்மை உடையதாக விளங்குதல்.

5. தனக்கென்று தெளிவான நோக்கங்களையும், செயல் திட்டங்களையும் கொண்டிருத்தல் ஆகியவை அரசியல் கட்சியின் பண்புக்கூறுகள் ஆகும்.

## அரசியல் கட்சிகளின் செயல்பாடுகள்

அடிப்படையில் அரசியல் கட்சிகள், தேர்தலில்வென்று, பதவிகளைப்பெற்று அதிகாரங்களுடன் செயல்படுகின்றன. அவை பொதுவாகக் கீழ்க்காணும் செயல்பாடுகளைக் கொண்டுள்ளன.

1. தேர்தலைச் சந்திக்கின்றன.

2. வாக்காளர்களிடம் தங்கள் கட்சிக் கொள்கைகளையும், திட்டங்களையும் முன்வைக்கின்றன.

3. சட்டங்களை உருவாக்குவதில் தீர்மானிக்கும் பங்கு வகிக்கின்றன,

4.பெரும்பான்மை இடங்களில் வெற்றி பெறும் கட்சியே ஆளும் கட்சியாகச் செயல்பட்டு ஆட்சி அமைக்கிறது.

5.தேர்தலில் பெரும்பான்மையை இழக்கும் கட்சி, எதிர்கட்சி ஆகிறது. அது மாற்றுக் கருத்துக்களை முன்வைத்தும், அரசின் தோல்விகள் மற்றும் தவறானக் கொள்கைகளை விமர்சனம் செய்தும் செயல்படுகிறது.

6.கட்சிகள் பொதுக்கருத்துக்களை உருவாக்குகின்றன. பிரச்சனைகளுக்காகக் குரல் கொடுத்து அவைகளை வெளிப்படுத்துகின்றன.

## அரசியல் கட்சியின் அமைப்பும், செயல்படும் முறையும்

அரசியல் கட்சியானது படிநிலை நிர்வாக அமைப்பைக் கொண்டுள்ளது. குறிப்பிட்ட கால இடைவெளியில், தேர்தல்மூலம் கட்சியின் தலைவர் தேர்ந்தெடுக்கப்படுகிறார். கட்சியின் உயர்நிலைப்பதவி 'தலைவர்' பதவி ஆகும். தலைவருக்கு உறுதுணையாக உதவிட செயலாளர்களும், பொருளாளரும் உள்ளனர். இவர்களுடன் கட்சிப்பணி செய்திட செயற்குழு உள்ளது. செயற்குழு அவ்வப்போது கூடி, பிரச்சனைகளை விவாதித்து, கலந்துரையாடி முக்கிய முடிவுகளை எடுக்கின்றன. ஆறு மாதத்திற்கு ஒருமுறை அல்லது வருடத்திற்கு ஒருமுறை கட்சியின் பொதுக்குழுக்கூட்டம் நடத்தப்பட்டு அதில் கட்சியின் தீர்மானங்களும், செயல்பாடுகளும் வரையறுக்கப்படுகின்றன.

கட்சியின் மாநாடுகள், கட்சியின் வலிமையினையும், உறுப்பினர்களிடையே கட்டுப்பாட்டு உணர்வினையும், பெரும் ஆதரவினையும் வெளிக்காட்டுவதோடு பொதுமக்களிடம் தாக்கத்தை ஏற்படுத்தவும் பயன்படுகிறது.

## கட்சி முறையின் வகைகள்

பொதுவாக கட்சிமுறைகள் மூன்று வகைப்படும், அவையாவன

1. ஒருகட்சி முறையில், ஓர் ஆளும்கட்சி மட்டுமே இருக்கும். எதிர்கட்சிகள் செயல்பட அனுமதி கிடையாது. முன்னாள் கம்யூனிச நாடான சோவியத் ரஷ்யா இதற்கு எடுத்துக்காட்டு ஆகும்.

2. இருகட்சி முறையில் இரண்டு பெரியகட்சிகள் மட்டுமே செயல்படும். எடுத்துக்காட்டு அமெரிக்கா, இங்கிலாந்து ஆகியவை.

3. பலகட்சி ஆட்சி முறையில் இரண்டுக்கு மேற்பட்ட பல அரசியல்கட்சிகள் செயல்படுகின்றன. எடுத்துக்காட்டு இந்தியா, பிரான்ஸ் இத்தாலி மற்றும் இலங்கை, ஆகியவை.

## இந்தியாவில் பலகட்சி அமைப்பு முறை

பரந்து விரிந்த இந்திய நாடும், அதன் பன்முகத் தன்மையும் பல அரசியல் கட்சிகள் உருவாகக் காரணமாய் உள்ளன. உலகத்தில் அதிகமான எண்ணிக்கையுடைய அரசியல் கட்சிகள் கொண்ட நாடாக இந்தியா திகழ்கிறது. பல்வேறு பட்ட மாநிலப் பிரச்சனைகள். பல வகையான சாதி, சமூக, பண்பாடு மற்றும் மொழி பிரிவுகளின் காரணமாகப் பலகட்சி அமைப்பு முறை இந்தியாவில் காணப்படுகிறது.

தேர்தல் முடிவிற்குப்பிறகு, மத்திய அரசில் கூட்டாட்சி அமைக்க வேண்டிய சூழ்நிலை உருவாகும்போது, மாநிலக்கட்சிகள், தேசியக்கட்சிகளுக்கு ஆதரவை நல்கி கூட்டாட்சி அமைக்க முற்படும் முக்கிய பங்கினை ஆற்றுகிறது.

### மாநில கட்சிகள்

சட்டப் பேரவை அல்லது நாடாளுமன்ற (கீழ்அவை) தேர்தலில் குறிப்பிட்ட சதவீதம் அல்லது குறிப்பிட்ட இடங்களைப்பெற்ற கட்சிகள் என்ற அடிப்படையில், இந்தியத் தேர்தல் ஆணையத்தினால் ஒப்புதல் பெற்ற கட்சிகள் மாநிலக் கட்சிகளாகும்.

### தேசியக் கட்சிகள்

குறைந்தது நான்கு மாநிலங்களில், மாநிலக்கட்சி என ஒப்புதல்பெற்ற கட்சிகள் தேசியக் கட்சிகளாகும்.

அனைத்து அரசியல் கட்சிகளும் தேர்தல் ஆணையத்திடம் தங்கள் கட்சியைப் பதிவு செய்ய வேண்டும். தேர்தல் ஆணையம் அனைத்துக் கட்சிகளையும் சமமாக நடத்துகிறது. அமைப்பு ரீதியான மாநில மற்றும் தேசியக்கட்சிகளுக்கு சிறப்புச் சலுகைகளை அளிக்கிறது. கட்சி சின்னத்தில் போட்டியிட அனுமதிக்கிறது. அரசியல் கட்சியின் ஒப்புதல் பெற்ற வேட்பாளர்கள் மட்டுமே கட்சி சின்னத்தைத்தேர்தலில் பயன்படுத்துகின்றனர்.

இவ்வாறு அரசியல் கட்சிகளானது மக்களாட்சியைச் சிறப்பாக நடத்த உதவுகின்றன. மேலும் மக்களாட்சியின் முதுகெலும்பாகவும் அரசியல் கட்சிகள் செயல்படுகின்றன.

## பயிற்சி

### I) சரியான விடையை எழுதுக.

1. __________ விழிப்புணர்வை அரசியல் கட்சிகள் உருவாக்குகின்றன.
   அ) சமூக ஆ) பொருளாதார இ) அரசியல்
2. இரு கட்சிமுறை உள்ள நாடு__________.
   அ) இந்தியா ஆ) அமெரிக்கா இ) பிரான்ஸ்
3. __________ மாநிலங்களில், மாநிலக்கட்சி என ஒப்புதல் பெற்றகட்சிகள் தேசியக் கட்சிகள் ஆகும்.
   அ) நான்கு ஆ) ஐந்து இ) ஆறு
4. __________மக்களாட்சியின் முதுகெலும்பாகச் செயல்படுகின்றன.
   அ) தேர்தல் ஆ) அரசியல் கட்சிகள் இ) வாக்குகள்

### II) கோடிட்ட இடத்தை நிரப்புக.

1. மக்களாட்சியில் குடிமகனே ஆள்பவரும்__________ ஆவார்.
2. அரசியல் கட்சிகள் __________கருத்தை உருவாக்கத் துணைபுரிகின்றன.
3. அரசியல் கட்சிகள் __________க்கும், அரசுக்கும் இடையில் இணைப்பாகச் செயல்படுகின்றன.

athiyamanteam.com | Video Course & Test Batch For TNPSC,Forest,TNUSRB,RRB Exams | Call : 8681859181

4. உலகத்தில் அதிகமான எண்ணிக்கையுடைய அரசியல் கட்சிகள் கொண்ட நாடாக__________ திகழ்கிறது.

## III) சுருக்கமாக விடையளி.

1. மக்களாட்சியைப் பற்றி ஆபிரகாம் லிங்கன் கூறியது என்ன ?
2. அரசியல் கட்சி என்றால் என்ன ?
3. அரசியல் கட்சியின் உள்உறுப்புகள் யாவை ?
4. அரசியல் கட்சியின் பண்புக் கூறுகளில் சிலவற்றைக் குறிப்பிடுக.
5. எப்பொழுது அரசியல் கட்சி தேசியக் கட்சியாக ஏற்றுக்கொள்ளப்படுகிறது ?

## IV) விரிவான விடையளி.

1. மக்களாட்சி நாட்டில் அரசியல் கட்சிகளின் செயல்பாடுகளைப் பற்றி விரிவாக எழுது.
2. உலகில் உள்ள மூன்றுவகை கட்சிமுறைகள் யாவை ? அவற்றினை எடுத்துக்காட்டுகளுடன் விளக்கவும்.